Singapore Examinations and Assessment Board

Singapore–Cambridge General Certificate of Education
Ordinary Level (2025)

# Tamil B
# தமிழ் B
# (Syllabus 1152)

© MOE 2025

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குரிய பாடத்திட்ட நோக்கங்கள் | 3 |
| மதிப்பீட்டு நோக்கங்கள் | 4 |
| தேர்வு அமைப்புமுறை | 5 |
| தேர்வு விவர அட்டவணை | 7 |
| கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம் | 9 |
| வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம் | 11 |

# 1 தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குரிய பாடத்திட்ட நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட உயர்நிலை வகுப்புகளுக்குரிய தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தலாகும். இவற்றோடு தமிழ் மரபுக் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் மாணவர்களுக்கு நன்கு விளக்குவதோடு நாட்டுருவாக்கத்துக்குத் தேவையான பண்புநலன்களையும் அவர்களிடத்தில் வளர்த்தலாகும். எனவே, உயர்நிலை வகுப்புகளுக்குரிய தமிழ்மொழிப் பாடத்திட்டம் பின்வரும் கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது:

### 1.1 கேட்டலும் நோக்கலும்

- மாணவர்கள் பல்வகையான கேட்டல் நோக்கல் வளங்களைக் கேட்டும் பார்த்தும் தக்க வகையில் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்

### 1.2 பேசுதல்

- மாணவர்கள் பல்வேறு சூழல்களுக்கேற்பப் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் தெளிவாகவும் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேசுவர்

### 1.3 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

- மாணவர்கள் சூழலுக்குத் தக்கவாறு பொருத்தமான முறையில் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவர்

### 1.4 படித்தலும் நோக்கலும்

- மாணவர்கள் பல்வகையான பனுவல்களைப் பார்த்தும் படித்தும் தக்க வகையில் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்

### 1.5 எழுதுதல்

- மாணவர்கள் சரியான மொழியமைப்புடனும் படைப்பாக்கத் திறனுடனும் தங்கள் கருத்துகளைப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துவர்

### 1.6 எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

- மாணவர்கள் சூழலுக்கேற்பப் பொருத்தமான மொழியமைப்பையும் வடிவத்தையும் பயன்படுத்தி எழுத்துவழியே கருத்துப்பரிமாறிக்கொள்வர்

## 2 மதிப்பீட்டு நோக்கங்கள்

உயர்நிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் கற்றல், கற்பித்தலின் வாயிலாகப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் அடைவுநிலைகளை அடைவதற்குரிய திறன்களைப் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

### 2.1 கேட்டல்

- எழுத்து, பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வைப் வெளிப்படுத்துதல்

### 2.2 பேசுதல்

- தலைப்புக்கு ஏற்ற முக்கியக் கருத்துகளைத் தர்க்கரீதியாகப் பொருத்தமான சான்றுகளுடன் தொடர்ச்சியாகவும் நிரல்படவும் எடுத்துரைத்தல்
- செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் கூறுதல்; பொருத்தமான சொல்வளமும் தொடரமைப்பும் கொண்ட மொழிநடையைப் பயன்படுத்துதல்; பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் பேசுதல்

### 2.3 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

- கொடுக்கப்படும் தலைப்பையொட்டிப் பொருத்தமான கருத்துகளைத் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் எடுத்துரைத்தல்
- கருத்துகளைப் பொருத்தமான சொல்லாட்சியையும் தொடரமைப்பையும் பயன்படுத்தி உரையாடுதல்

### 2.4 படித்தல்

- பலதரப்பட்ட பனுவல்களை ஆழ்ந்து படித்துத் தம் புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### 2.5 எழுதுதல்

- சிறந்த மொழிநடையில் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்வளத்தையும் வாக்கிய வகைகளையும் பயன்படுத்திக் கட்டுரையைச் சிறந்த பத்தியமைப்புடனும் கருத்துத் தொடர்ச்சியுடனும் எழுதுதல்
- கொடுக்கப்படும் தலைப்புகளுக்கு ஏற்ற கருத்துகளைப் பல்வகைச் சொல்வளத்தையும் வாக்கிய அமைப்பையும் பயன்படுத்தி எழுதுதல்

### 2.6 எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

- மின்னஞ்சல், கட்டுரை ஆகிய வடிவங்களில் அமைந்த தலைப்புக்கு ஏற்ற கருத்துகளைத் தெளிவாகவும் விரிவாகவும் பொருத்தமான எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தியும் எழுதுதல்
- சரியான மொழியமைப்பைப் பயன்படுத்திக் கருத்துகளை எழுதுதல்

## 3 தேர்வு அமைப்புமுறை

தமிழ் B தேர்வு மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

### வினாத்தாள் 1: கட்டுரை

**(50 நிமிடங்கள், 20 மதிப்பெண்கள், 20%)**

இத்தாளில் இரண்டு கட்டுரைத் தலைப்புகள் இடம்பெறும். ஒன்று மின்னஞ்சல்; மற்றது படத்தொடரை அடிப்படையாகக்கொண்ட கட்டுரை. இரண்டு தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் விடையளிக்கவேண்டும். தேர்வெழுதுவோர் கட்டுரைக்கான விடையைக் கணினிவழித் தட்டச்சிடவேண்டும்.

### வினாத்தாள் 2: மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்

**(1 மணி நேரம், 30 மதிப்பெண்கள், 30%)**

இத்தாள் ‘அ’, ‘ஆ’, ‘இ’ ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது.

**‘அ’ பிரிவு (முன்னுணர்வுக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் இரண்டு பனுவல்களையொட்டி (சொல்லளவு: 120-130) பத்துத் தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**‘ஆ’ பிரிவு (கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் 2 கருத்துவிளக்கப்படங்கள் இடம்பெறும் (சொல்லளவு: 90-100). அவற்றையொட்டி ஐந்து தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**‘இ’ பிரிவு (தெரிவுவிடைக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் கதை வடிவிலான இரண்டு பனுவல்கள் (சொல்லளவு: 190-210) இடம்பெறும். அவற்றையொட்டி ஐந்து தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

## வினாத்தாள் 3: வாய்மொழித் தேர்வும் கேட்டல் கருத்தறிதலும்

**(50 மதிப்பெண்கள், 50%)**

இத்தாள் வாய்மொழித் தேர்வு, கேட்டல் கருத்தறிதல் ஆகிய இரு பகுதிகளை உள்ளடக்கியது.

### வாய்மொழித் தேர்வு

**(30 மதிப்பெண்கள், 30%)**

இத்தேர்வு பின்வரும் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது.

- வாய்விட்டு வாசித்தல்
- ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்

**வாய்விட்டு வாசித்தல்**

தேர்வுக்கு அமர்வோர் கணினித்திரையில் இடம்பெறும் ஒரு வாசிப்புப் பனுவலை வாய்விட்டு வாசிக்கவேண்டும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசைநயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்**

தேர்வுக்கு அமர்வோர் கொடுக்கப்படும் ஓர் ஒளிக்காட்சியைப் பார்க்கவேண்டும். பின்னர், தேர்வாளருடன் அதன் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடவேண்டும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலின் சரளம், பயன்படுத்தும் மொழியின் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

### கேட்டல் கருத்தறிதல்

**(20 மதிப்பெண்கள், 20%)**

செய்தி, உரையாடல், கதை, விளம்பரம், அறிவிப்பு, சிற்றுரை முதலான வகைகளில் நான்கு குறும்பனுவல்களும் மூன்று நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரு தேர்வில் இவ்வகைகள் அனைத்தும் இடம்பெறவேண்டும் என்ற அவசியமில்லை.

## 4 தேர்வு விவர அட்டவணை

**2024-ஆம் ஆண்டுமுதல் அமல்படுத்தப்படும் சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தேர்வு தமிழ் B (1152)**

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1<br>(50 நிமிடங்கள்) | **கட்டுரை**<br>மின்னஞ்சல்/ கட்டுரை<br><br>(100 சொற்களுக்குக் குறையாமல்) | சுயவிடை | 2<br>(ஒரு வினாவிற்கு மட்டும் விடையளித்தல்) | **(20%)**<br>20 |
| 2<br>(1 மணி) | **மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்** | | | **(30%)**<br>**30** |
| | **‘அ’ பிரிவு**<br>முன்னுணர்வுக் கருத்தறிதல் 1 | தெரிவுவிடை | 5 | 10 |
| | முன்னுணர்வுக் கருத்தறிதல் 2 | தெரிவுவிடை | 5 | |
| | **‘ஆ’ பிரிவு**<br>கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல் 1 | தெரிவுவிடை | 2 | 10 |
| | கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல் 2 | தெரிவுவிடை | 3 | |
| | **‘இ’ பிரிவு**<br>கருத்தறிதல் 1 | தெரிவுவிடை | 2 | 10 |
| | கருத்தறிதல் 2 | தெரிவுவிடை | 3 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3<br>(10 – 15 நிமிடங்கள்)<br><br>(ஏறத்தாழ 30 நிமிடங்கள்) | <u>வாய்மொழியும் கேட்டல் கருத்தறிதலும்</u><br><br><u>வாய்மொழி</u><br><u>'அ' பிரிவு</u><br><br>வாய்விட்டு வாசித்தல்<br><br><u>'ஆ' பிரிவு</u><br>ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் | <br><br><br><br><br>சுயவிடை<br><br><br>சுயவிடை | <br><br><br><br><br>1<br><br><br>1 | **(50%)**<br>**50**<br><br>**(30%)**<br>**30**<br><br>10<br><br>20 |
| | <u>கேட்டல் கருத்தறிதல்</u><br><u>'இ' பிரிவு</u><br><br>கேட்டல் கருத்தறிதல்<br>• 7 பனுவல்கள் | <br><br><br>தெரிவுவிடை | <br><br><br>10 | **(20%)**<br><br><br>20 |

# சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலை
# தமிழ் B
# கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம் (20 மதிப்பெண்கள்)

பொருள் (10 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| மதிப்பெண்கள் | 8 - 10 | 4 - 7 | 1 - 3 |
| **கருத்துப் பொருத்தம்** | ▪ பெரும்பாலும் பொருத்தமான கருத்துகள் | ▪ ஓரளவு பொருத்தமான கருத்துகள் | ▪ மிகச் சில பொருத்தமான கருத்துகள் |
| **கருத்து வளர்ச்சி** | ▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ கருத்து வளர்ச்சி ஓரளவு முழுமை பெற்றிருத்தல் | ▪ கருத்துகள் தெளிவற்று இருத்தல்; கூறியது கூறல் இடம்பெற்றிருத்தல் |

மொழியும் அமைப்புமுறையும் (10 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| மதிப்பெண்கள் | 8 - 10 | 4 - 7 | 1 - 3 |
| **இலக்கணமும் மொழியமைப்பும்** | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி முதலானவற்றில் சில பிழைகள் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி முதலானவற்றில் பல பிழைகள் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி முதலானவற்றில் நிறையப் பிழைகள் |
| **கருத்து வெளிப்பாடு** | ▪ கருத்துகளை விளக்கப் பொருத்தமான சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ கருத்துகளை விளக்க ஓரளவு பொருத்தமான சொல்லாட்சியையும் எளிய வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ மொழிப் பிழைகளினால் கருத்துகளைப் புரிந்துகொள்வதில் இடர்ப்பாடு இருத்தல் |
| **கருத்துத் தொடர்ச்சி** | ▪ சிறந்த கருத்துத் தொடர்ச்சியுடன் எழுதியிருத்தல் | ▪ ஓரளவு கருத்துத் தொடர்ச்சியுடன் எழுதியிருத்தல் | ▪ கருத்துத் தொடர்ச்சியுடன் எழுத இடர்ப்பட்டிருத்தல் |

# சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலை
# தமிழ் B
# வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம் (30 மதிப்பெண்கள்)

வாய்விட்டு வாசித்தல் (10 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| மதிப்பெண்கள் | 4 - 5 | 2 - 3 | 1 |
| **உச்சரிப்பும் சொல்லழுத்தமும்** (5 மதிப்பெண்கள்) | ▪ மிகச் சில பிழைகளை மட்டும் கொண்ட உச்சரிப்பு<br>▪ பொதுவாகத் தெளிவான சொல்லழுத்தம் | ▪ பல பிழைகளைக் கொண்ட உச்சரிப்பு<br>▪ ஓரளவு தெளிவான சொல்லழுத்தம் | ▪ பல பிழைகளைக் கொண்ட தவறான உச்சரிப்பு<br>▪ தெளிவில்லாத சொல்லழுத்தம் |
| மதிப்பெண்கள் | 4 - 5 | 2 - 3 | 1 |
| **சரளமும் ஓசைநயமும்** (5 மதிப்பெண்கள்) | ▪ பொதுவாகச் சரளமான வாசிப்பு<br>▪ பொதுவாகப் பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | ▪ ஓரளவு சரளமான வாசிப்பு<br>▪ ஓரளவு பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | ▪ சரளமற்ற வாசிப்பு<br>▪ கிட்டத்தட்ட தனித்தனிச் சொல்லாக வாசித்தல் |

**ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் (20 மதிப்பெண்கள்)**

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| **மதிப்பெண்கள்** | **8 - 10** | **4 - 7** | **1 - 3** |
| **கருத்துரைத்தலும் கருத்து வளர்ச்சியும்** (10 மதிப்பெண்கள்) | ▪ தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான கருத்துகளைக் கூறுதல்<br>▪ பெரும்பாலான கருத்துகளைத் தொடர்ச்சியாகவும் தெளிவாகவும் கூறுதல்<br>▪ பெரும்பாலும் உரையாடலைத் தொடர்ச்சியாக நிகழ்த்துதல்<br>▪ உரையாடலை நிகழ்த்துவதற்குக் குறைந்த அளவிலான தூண்டுதல் தேவைப்படுதல் | ▪ ஓரளவு தலைப்புக்கு ஏற்ற சில கருத்துகளைக் கூறுதல்<br>▪ சில கருத்துகளை ஓரளவு தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் கூறுதல்<br>▪ சில வேளைகளில் மட்டும் உரையாடலைத் தொடர்ச்சியாக நிகழ்த்துதல்<br>▪ உரையாடலை நிகழ்த்துவதற்கு அவ்வப்போது தூண்டுதல் தேவைப்படுதல் | • தலைப்புக்கு ஏற்ற கருத்துகள் சொல்ல இயலாமை<br>▪ கருத்துகளை விவரிக்க இயலாத நிலை<br>▪ பெரும்பாலும் உரையாடலைத் தொடர்ச்சியாக நிகழ்த்த இயலாமை<br>▪ உரையாடலை நிகழ்த்துவதற்குத் தொடர்ச்சியான தூண்டுதல் தேவைப்படுதல் |
| **மதிப்பெண்கள்** | **8 - 10** | **4 - 7** | **1 - 3** |
| **சரளமும் மொழிப் பயன்பாடும்** (10 மதிப்பெண்கள்) | ▪ பொருத்தமான சொல்வளத்தையும் வாக்கியங்களையும் பயன்படுத்திச் சரளமாக உரையாடுதல் | ▪ அடிப்படையான சொல்வளத்தையும் எளிய வாக்கியங்களையும் பயன்படுத்தி ஓரளவு சரளமாக உரையாடுதல் | ▪ மிகக் குறைவான அல்லது பொருத்தமற்ற சொல்வளத்தைப் பயன்படுத்துவதோடு நிறுத்தி நிறுத்தித் தயக்கத்தோடு பேசுதல் |